RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2444

OPEN ACCESS

# சு. தமிழ்ச்செல்வியின் கீதாரி நாவல் காட்டும் பெண்மைய சிந்தனைகள்

ம. பிரபு [அ, *]

[அ] தமிழ்த்துறை, துவாரகாதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி அரும்பாக்கம், சென்னை-600106, இந்தியா.

# S. Tamilselvi's novel Geethari shows feminist thoughts

**M. Prabhu** [a, *]

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author: prabhubalaji985@gmail.com

Received: 16-05-2024
Revised: 02-08-2024
Accepted: 08-08-2024
Published: 15-08-2024

Check for updates

**ABSTRACT**

Among the numerous literary genres in Tamil, novel literature is unique. Initially, there were historical fiction novels. Later, in course of time, a large number of regional novels depicting the pain and agony of the people of the land began to appear. In this way, the novel Geethari depicts the life of the shepherds who herd cattle. In this novel there are women characters like Irulayi, Muthammal, Karicha, Sivapi and Chithiram. Many of the problems faced by women in this novel are discussed in this novel. Thus, the purpose of this article is to explore how this novel expresses the issues related to women through the topics of attaining puberty, adoption of girl children, infertility and female infanticide.

**Keywords:** Geethari, Tamilselvi novel, Women,Life issues

## முன்னுரை

தமிழில் காணப்படும் எண்ணற்ற இலக்கிய வகைமைகளில் புதின இலக்கியம் தனித்துவம் பெற்றவையாகத் திகழ்கின்றது. தொடக்கத்தில் வரலாற்றுப் புனைவுகள் கொண்ட புதினங்கள் இடம்பெற்றிருந்தன. பின்பு காலப்போக்கில் அந்தந்த மண்சார்ந்த மக்களின் வலிகளையும் வேதனைகளைப் பிரதிபலிக்கும் வட்டார புதினங்கள் பெருமளவில் வெளிவரத் தொடங்கின. அந்த வகையில் ஆநிரைகள் மேய்க்கும் இடையர் குலமக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் விதமாக கீதாரி நாவல் விளங்குகிறது. இந்நாவலில் இருளாயி, முத்தம்மாள், கரிச்சா, சிவப்பி, சித்திரம் முதலிய பெண்கதை மாந்தர்கள் இடம் பெற்றுள்ளனர். இக்கதை மாந்தர்களினூடே பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பல இப்புதினத்தில் பேசப்படுகிறது. அவ்வாறு, பெண்பருவம் எய்துதல், பெண்குழந்தைகளைத் தத்தெடுத்தல், குழந்தைப்பேறு இன்மை, பெண்சிசுகொலை எனும் இத்தலைப்புகளினூடாக பெண்சார்ந்த பிரச்சனைகளை இந்நாவல் எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்பருவம் எய்துதல்

மனிதப்பிறப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சில உடல்சார்ந்த வேறுபாடுகள் உள்ளன. அந்தவகையில் பெண்ணின் வளர்ச்சி நிலையில் பருவம் எய்துதல் என்பது பெண் உடலில் இராசாயனங்களில் ஏற்படுகின்ற ஒருவித மாற்றமாகும். இந்த தருணத்தில் அப்பெண் அடைகின்ற

வலிகளையும் வேதனைகளையும் எழுத்தில் வடிக்க இயலாது எனலாம். அவ்வாறு, பெற்றத்தாய் தந்தை இல்லாது ராமு கீதாரியால் தத்தெடுத்து வளர்க்கப்படும் பெண்குழந்தைகளாக சிவப்பி, கரிச்சா எனும் இவ்விரு கதைமாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். சிவப்பி மூத்தவள் பின்னால் சாம்பசிவம் என்பவரால் வளர்க்கப்படுகிறாள் அங்கு அடிமை போல் பல வேலைகளைச் செய்ய கட்டயாப்படுத்தப்படுகிறாள். சிவப்பி பருவம் அடைந்தவுடன் அந்தவீட்டில் சில கட்டுபாடுகள் விதிக்கப்படுகின்றன என்பதை தன் தங்கை கரிச்சாவிடம் சொல்லி புலம்புவதை,

"ஆம்புளைவொ மொவத்துல முளிக்கக் கொடாதுண்ணு உள்ளயே இருன்னுட்டாவோ எதையுமே தொடக்கொடா தாம் தானியம் தொட்டாபூச்சி புடிச்சிருமாம் சட்டிபானைய தொட்டா ஒடஞ்சி பெயிருமாய் பயிறுபச்சசெடி கொடிய தொட்டா செத்துபெயிருமாம்" (கீதாரி. ப.67) இவ்வுரைக் குறிப்பு தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு சிவப்பியின் தங்கை கரிச்சா பருவம் எய்தும் போது அருகில் பெண்துணையின்றி அவள் அவதிப்படுவதை இப்புதினத்தில் காணமுடிகிறது.

மழைக்காலத்தில் வயல்களில் ஆடுகளுக்கு மேய்ச்சல் இல்லாதபோது ஆடுகளுக்கு பாதுகாப்பாவும் மேய்ச்சல் நிலமாகவும் விளங்கும் மன்னாரம் எனும் ஊர் இந்நாவலில் சுட்டப்படுகிறது. இங்கு தனது சித்தப்பாவுடன் கரிச்சா தங்கி இருக்கிறாள். ஒருநாள் மழைப்பொழிகின்ற இரவுப்பொழுதில் பருவம் அடைகிறாள் கரிச்சா. தான் அடைகின்ற வலிகளையும் வேதனையையும் சொல்லி அழுவதற்கும் தனக்கு ஆறுதல் கூறுவதற்கும் தாய் இல்லையே என வருந்துகிறாள் கரிச்சா. பெண்பருவம் எய்தல் என்பது குழந்தைப்பேறு பெறுவதற்குரிய தகுதிப்பாட்டை அடைகிறாள் என்பதின் அடையாளமாகும். ஆனால் பருவம் எய்துதல், குழந்தைப்பெறுதல் போன்றவற்றால் ஏற்படுகின்ற வலிகளிலும் வேதனைகளிலும் பங்கு கொள்ளாமலே ஆண் அவனுக்குரிய இன்பத்தைப் பெறுகிறான் என்பதை, "ஆணும் பெண்ணும் இணைந்து, மக்களைப் பெறுக்கும் ஒரே செயலாற்றலில் பெண்கூடுதல் பங்கையும் பொறுப்பையும் ஏற்கிறாள். பெண்ணின் உடல் கூறியல் இந்தச் சிறப்பான அவளுடைய பொறுப்புக்கு ஏற்புடையதாக அமைந்திருக்கிறது. ஆணோ திருமண பந்தத்தினால், இத்தகைய இராசாயன மாற்றங்களுக்கு இயல்பாக உட்படுவதில்லை. இன்பத்தைப்பெறுகிறான். பின்னால் மக்கட்பேற்றின் பயனையும் எய்துகிறான் இதனால் ஆணுக்கு இன்பம் மட்டும் இலட்சியமாகப் பழகிவிடுகிறது பெண்ணைப் போகப்பொருளாகக் கொள்ளும் ஒருபங்கும் மேவுகிறது" (ப.15, காலந்தோறும்பெண்,) ராஜம்கிருஷ்ணன் தனது நூலில் தெளிவுபடுத்துகிறார். பெண் இந்தச் சமூகத்தில் அளிக்கப்படுகின்ற இன்னல்களுக்கு இத்தகைய உடலியல் சார்ந்த மாற்றங்கள் ஒரு முக்கியக் காரணமாக விளங்குகிறது என்பதை மேற்காணும் குறிப்புகளின் மூலம் உய்த்துணர முடிகிறது.

## பெண் குழந்தைகளைத் தத்தெடுத்தல்

ஒரு சமூகம் சிறப்புடன் நிலைபெறுவதற்கு ஆணும் பெண்ணும் இணைந்த இல்லற வாழ்க்கை மிகமுக்கியமானதாகும். அதாவது ஓர் ஆணும் பெண்ணும் உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றினைந்து வாழும் வாழ்க்கையே குடும்ப வாழ்க்கையாகும். இதனை,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது" (குறள்.45)

என்பதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். இத்தகைய இல்லற வாழ்க்கையில் ஓர் அங்கமாகத் திகழ்வது,

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்து

மக்கட்பேறு அல்ல பிற" (குறள்.61)

எனும் நன்மக்களைப் பெற்றெடுத்தலாகும்.

குழந்தைப்பேறு வாய்க்கப்பெறாத மாந்தர்கள் குழ்ந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் போக்கு இன்றையச் சூழலில் காணப்படுகிறது. அவ்வாறு வளர்க்கப்படும் சில குழந்தைகள் எத்தகைய துன்பத்திற்கு ஆளாகின்றனர் என்பதையும் பல்வேறு இலக்கியக் குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன. அந்த வகையில் கீதாரி நாவலில் சாம்பசிவத்தால் சிவப்பி எனும் பெண்குழந்தை தத்தெடுத்து வளர்க்கப்படுகிறாள். பொதுவாக குழந்தை இல்லாதவர்கள் அதன் இயலாமையைப் போக்கித் தங்களின் மனநிறைவுக்கு ஏற்ற வகையில் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பர். இதற்கு மாறாக சாம்பசிவத்திற்கு இரண்டு மனைவி நிறைய குழந்தைகள் என ஒரு பெரிய குடும்பமாகத் திகழ்கிறது. இந்தச் சூழலில் சிவப்பி அங்கு வளர்க்கப்படுகிறாள் பல்வேறு கொடுமைகளை அனுபவிக்கிறாள் எனலாம்.

சிறு குழந்தையாக வளரும் சிவப்பிக்கு எண்ணற்ற வேலைகளைக் கொடுத்து ஓர் அடிமைபோல் நடத்தப்படுவதை, "சாம்பசிவத்துக்கு ஐந்தாறு தென்னந்தோப்புகளும் தரைவாயில் ஏழெட்டுமா நிலமிருந்தன. இரண்டுபெண்டாட்டிகள் பிள்ளைகள் என்று குடும்பம் பெரியதுதான்..... சிவப்பி, தென்னம்பிள்ளைக்கு தண்ணீர் ஊற்றுவது, பயத்த நெற்று எடுப்பது, கடலைபிடுங்குவது, கேழ்வரகு நாற்று ஊன்றுவது, கதிர் அறுப்பது என்று ஏதாவது வேலைசெய்துகொண்டேஇருப்பாள்.சிவப்பி, வீட்டில் கொஞ்சநேரம் கூட சும்மாயிருக்க மாட்டாள். சும்மாயிருக்கஅவளையாரும் விடுவதில்லை" (கீதாரி. ப. 64) இவ்வுரைக் குறிப்பு தெளிவுபடுத்துகிறது. காலப்போக்கில் சாம்பசிவத்தின் மனநிலை மாறுகிறது. மாடாக உழைத்து மடியும் சிவப்பியின் மீது இரக்கம் கொள்வதற்குப் பதிலாக அவளை ஒருபோகப் பொருளாகப் பார்க்கிறான் என்பதை, "நீ சொல்லுற மேரி, எனக்கும்பயமாத்தாங்இருக்கு. இந்தவூட்டு அப்பா மின்னாடிமேரி இல்ல. குடிச்சிட்டு வந்துட்டா வெறிக்க வெறிக்க பாக்குறாரு. அவரப் பாக்கவே பயமாருக்குதங்கச்சி" (கீதாரி. ப. 76) எனும் இவ்வுரைக் குறிப்பு சான்றாகும். பெண்தெய்வத்திற்கு நிகராகப் போற்றப்படுபவள் இத்தகைய சிறப்புடைய பெண்ணினம் ஒருபோகப் பொருளாக மட்டும் பார்க்ககூடிய சூழல் நிலவுகிறது என்பதை இந்நாவல் பதிவு செய்துள்ளதை உய்த்துணர முடிகிறது.

## குழந்தைபேறு இன்மை

மனித வாழ்க்கையில் இல்லறம், துறவறம் எனும் இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் இல்லறத்தின் சிறப்பு, இல்லறத்தார்க்குரிய கடமைகள் என்ன என்பன குறித்து? வள்ளுவர் பலவாறு குறித்துச் செல்வதைக் காணலாம். மேலும், இல்லறத்தார் பெறக்கூடிய செல்வங்களுள் ஒன்றாகக் குழந்தைச் செல்வம் திகழ்வதை,

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லைஅறிவறிந்து

மக்கட்பேறு அல்ல பிற" (குறள்.61)

இக்குறட்பா தெளிவுபடுத்துகிறது. இத்தகைய குழந்தைப்பேறு கிடைக்கப்பெறாத போது இல்லற வாழ்க்கையில் ஒருவித வெறுமை காணப்படுவதை இலக்கியங்கள் பலவாறு பதிவுசெய்துள்ளன. அவ்வாறே குழந்தைபேறு இல்லாத சூழலில் ஒரு பெண் தண்டிக்கப்படுகிறாள் என்பதை இந்நாவலில் காணமுடிகிறது.

வெள்ளச்சாமி, கரிச்சா கணவன் மனைவி தம்பதிகளாக இந்நாவலில் வலம் வருகின்றனர். இவர்களுடைய மணவாழ்க்கை எதிர்பாராதச் சூழலில் நடைபெற்றிருந்தாலும், இருவருக்கும் மனநிறைவைத் தருவதாகஉள்ளது. இந்த அன்பும் அறவணைப்பும் சில ஆண்டுகளே நீடிக்கிறது. ஒருகட்டத்தில் நமக்குத் திருமணமாகி எட்டாண்டுகள் ஆகின்றன ஆனால் நமக்குக் குழந்தை இல்லை என்பதை இருவரும் தமக்குள் எண்ணி வருந்துகின்றனர். இந்தச் சூழலில் தான் வெள்ளச்சாமியின் உறவினர்கள் கடுமையான வார்த்தைகளால் கரிச்சா வைத்து துன்பப்படுத்த தொடங்கினர் என்பதை, "வருடங்கள் ஆக ஆக குழந்தை பிறக்கவில்லை என்பதை குத்திக் காட்டி சதாபேச ஆரம்பித்தார்கள். அவள் யாருமற்ற அனாதை யென்பதையும் பயித்தியம் பெத்துப் போட்ட

பிள்ளை என்பதையும் அவ்வப் போது சுட்டிக்காட்டியபடி இருந்தார்கள்" (கீதாரி. ப. 150) எனும் இவ்வுரைக் குறிப்பு தெளிவுபடுத்துகிறது.

ஊரார் மற்றும் உறவினர்களின் சொல்லால் காயம் பட்ட கரிச்சாவிற்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. தன் கணவன் தனக்குத் துணையாக இருப்பார் என்ற அவளது நினைப்பும் பொய்த்துப் போனது. வெள்ளைச்சாமி பல நேரங்களில் அந்தக் கோபத்தை கரிச்சாவிடம் நேரிடையாகவே காட்ட ஆரம்பித்தான் என்பதற்கு, "வெள்ளைச்சாமி இப்போதெல்லாம் கரிச்சாவிடம் அதிகமாய் முகம் கொடுத்து பேசுவதேயில்லை. சோறுபோட்டு வைத்தால் வேண்டா வெறுப்பாக தின்றுவிட்டு தட்டை தள்ளிவைத்து விட்டுப் போவான்"(கீதாரி. ப. 151) எனும் இவ்வரைக் குறிப்பு சான்றாகும். குடும்ப வாழ்க்கையில் குழந்தைபேறு என்ற அந்தநிலையை அடையும்வரை ஒருபெண் அனுபவிக்கின்ற துயரங்களை மிக ஆழமாக இந்நாவல் பதிவு செய்துள்ளது.

பெண்ணின் உடல்கூறானது கருவைச் சுமந்து ஒரு உயிரை இந்த உலகத்திற்குக் கொடுக்கக்கூடிய வகையில்உள்ளது. அதாவது, பெண் என்பவள் உயிரினைக் கொடுக்கக் கூடியவள் ஆகும். இதில் ஆணின் பங்களிப்பும் சமஅளவில் உள்ளது. ஆனால் குழந்தைபேறு இல்லாத சூழலில் பெண்ணை மட்டும் காரணம் காட்டுவது என்பது, அவளை ஒரு குழந்தை பெறும் இயந்திரமாக பார்க்கும் மனநிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது எனலாம். மேலும் இன்றைய நவீனஉலகில் உணவு உள்ளிட்ட பழக்கவழக்கங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் பெரும்பாலும் நம்மண் சார்ந்த வாழ்வியலுக்கு ஏற்புடையதாக இல்லை. இதன் விளைவாக ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல்சார்ந்த பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே குழந்தைபேறு இன்மையில் பெண்ணைமைய மிட்டு பேசுகின்ற அந்த இழிநிலை மாறவேண்டும் என்பதை இந்நாவல் ஓங்கி ஒலிக்கின்றது என்பதற்கு மேற்கண்ட குறிப்புகளே தகுந்த சான்றுகளாகும்.

## பெண் (சிசு) கொலை

பெண், குடும்பவாழ்க்கை முதற்கொண்டு அனைத்து நிலைகளிலும் தனித்து மிக்கவளாகத் திகழ்கிறாள். எனினும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் பெண்குழந்தை பிறப்பு என்பது ஒரு வேண்டா வரமாகவே பார்க்கப்படுகிறது. ஒரு ஆண்குழந்தை பிறக்கும்போது ஏற்படுகின்ற மகிழ்ச்சிபோல் பெண்குழந்தை பிறப்பின் போது காணமுடியவில்லை என்பதே இன்றைய எதார்த்தநிலை. பெண்குழந்தையின் மீது காட்டப்படுகின்ற இத்தகைய வெறுப்புணர்ச்சியே மருத்துவமனை கழிவறைகளிலும் தெருவோரம் குப்பைத் தொட்டிகளிலும் அவர்களை வீசப்படுவதற்குக் காரணமாக அமைகின்றன எனலாம். இதனையும் மீறி இத்தகைய மனநிலைகள் பெண்சிசு கொலைவரை நீடிப்பதையும் காணமுடிகிறது. காலம் காலமாக இத்தகைய தாக்குதல்கள் பெண்குழந்தைகளை நோக்கி வந்துள்ளன என்பதை, பல இலக்கிய குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

பெண்குழந்தைகள் மீதான இத்தகைய தாக்குதல்கள் இன்று குறைந்துள்ளன அல்லது அவை கௌரவக்கொலைகள் என மாற்றுருவம் கொண்டுள்ளன எனலாம். குடிப்பெருமையை நிலைநாட்டும் பொருட்டு பலகௌரவக் கொலைக் கொலைகள் அரங்கேறி வருகின்றன அதில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான் என்பது வேதனைக்குரியது. பெண்குழந்தைகள் குலதெய்வமாகப் போற்றப்பட்டு அன்போடு வளர்க்கப்படுகிறாள். ஆனால் இதற்கு மாறாக அப்பெண் தனக்கான மணவுறவைத் தேடிக்கொள்ளும் போதோ அல்லது குடும்பத்தின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் போதோ அவள் தாக்கப்படுகிறாள் என அதற்கான காரணம் கற்பிக்கப்படுகிறது. எனினும் இது ஏற்புடையது அல்ல என்பதே மாந்தர்களின் உயரிய எண்ணமாகும். இவ்வாறு சித்திரம் எனும் பெண்சக ஆணுடன் பேசியதற்காகக் கொல்லப்படுகின்றாள் எனும் கொடுமையான நிகழ்வை இந்நாவல்மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

சிவப்பி தனது ஊரில் நடந்த நிகழ்வுகள் சிலவற்றை தன் தங்கை கரிப்பியிடம் எடுத்துரைக்கிறாள். அதாவது சித்திரம் கரகாட்டம் பார்க்கசென்ற இடத்தில் யாரோ ஒரு ஆண் நண்பர் அவளிடம் வந்து பேசிவிட்டான் எனவும் அவளும் பதிலுக்கு சில வார்த்தைகளைப் பேசுகிறாள். இந்நிகழ்வு ஒரு குற்றமாகப் பார்க்கப்படுவதை, "கரகாட்டம் வான வேடிக்கைப் பாக்ககூட்டமான கூட்டம் வந்திருந்துச்சாம் கூட்டத்தோட கூட்ட மாயாரோ ஒருத்தன் சித்துரத்து பின்னாடியே வந்து பேச்சு குடுத்தானாம், தெரிஞ்சவனாத்தான் இருக்கனும். இல்லாட்டி சொந்தக்காரனோ என்னமோ யாருகண்ட இதுவும் பதிலுக்கு ஏதோ சிரிச்சிச்சிரிச்சிபே சிருக்கு அவ்வளதுதான் இதப் பாத்துட்டு வந்துயாரோ வூட்டுல சொல்லியும் புட்டாவோ"(கீதாரி. ப. 72) இக்கூற்றுத் தெளிவுபடுத்துகிறது. மேலும்,

பெண்களுக்கான உரிய சுதந்திரம் அவர்கள் பிறந்த வீட்டிலும் மறுக்கப்படுகிறது என்பதற்கு "கோடா, கத்தியோட போனவனுவ இலுப்ப தோப்புல கொண்டவச்சி அந்தப்பொண்ண அடிஅடின்னு அடிச்சிகை யிகாலயெல்லாம் முறிச்சி கொன்னுட்டானுவொ" (கீதாரி. ப. 72) இக்குறிப்பு தகுந்த சான்றாக அமைகிறது. இன்றைய காலக்கட்டத்தில் பாலின சமுத்துவம் குறித்து அதிகம் பேசப்பட்டுவருகிறது. எனினும் தான் பெற்ற பிள்ளையைக் கொலை செய்யும் அளவிற்குசமூகச்சூழல் மாறியுள்ளது என்பது வேதனைக்குரியதாகும். குறிப்பாக இத்தகைய கொடுமைகளில் பெண்பிள்ளைகளை மானுடச் சமூகம் அதிகமாக இழந்து வருவதை இந்நாவலாசிரியர் மிக ஆழமாகப் பதிவுசெய்துள்ளார் என்பதையும் உய்த்துணரமுடிகிறது.

## முடிவுரை

இலக்கியங்கள் மனித வாழ்வியலைப் பிரதிபலிக்கின்ற காலக்கண்ணாடிகளாகும். அவற்றுள்நாவல் இலக்கியம் மக்களின் உணவு, தொழில், நம்பிக்கை, சடங்குகள் எனப் பல்வேறு கூறுகளை வெளிப்படுத்துவதில் தனித்துவ மிக்கவையாகத் திகழ்கின்றது. அந்தவகையில் கீதாரி நாவலில் பெண் சார்ந்தபதிவுகள் விரவிக் கிடக்கின்றனஎன்பதற்கு மேற்கண்ட கருத்துகள் தக்கச் சான்றுகளாகும். குறிப்பாக, கரிச்சா, சிவப்பி, சித்திரம் ஆகிய பெண்மாந்தர்கள் தாங்கள் பெண் என்ற ஒரே காரணத்தால் எத்தகைய இன்னல்களைச் சந்திக்கின்றனர் என்பதற்கு எண்ணற்றக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. மேலும் பெண்படைப்பாளராகிய இந்நாவலாசிரியர் பெண் சார்ந்த வலிகளையும் வேதனைகளையும் புனைவுகளின்றி இந்நாவலில் பதிவுசெய்துள்ளதையும் காணமுடிகிறது. எனவே, பெண் பெரும் சக்தி படைத்தவள் தெய்வத்திற்கு நிகரானவள், இத்தகைய பெண்ணினத்தை வளர்ச்சியே மனிதஇனத்தின் வளர்ச்சியாக இருக்கும் என்பதை இக்கட்டுரை நிறைவாகக்கொள்கிறது

## References


சு. தமிழ்ச்செல்வி, கீதாரி, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை.

கு. மோகனராசு, திருக்குறள் மக்கள் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

ராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண், தாகம் பதிப்பகம், சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License